23rd August 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There was no such complaint regarding an occurrence on 23rd June 1960. But a case of dacoity occurred on 24th June 1960 on the Tiruvannamalai-Kanchee road and this has been registered and is being investigated.

(*b*) The dacoits have not yet been apprehended.

SRI P. U. SHANMUGAM : *பகற்கொள்ளை கொடுத்துவிட்டு அவர்கள் போலீஸில் புகார் செய்தபொழுது போலீஸார் விரட்டி அடித்தார்கள் என்பது உண்மைதானா? மேற்கொண்டு பல கொள்ளைகள் நடந்து, போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்தபொழுது போலீஸார் விரட்டி அடித்தார்கள் என்பதும் உண்மையா? இது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்வார்களா?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *நான் இரண்டு நாட்களுக்கு முன்னால் வேலூர் சென்றிருந்தபொழுது திருவண்ணாமலையிலிருந்துகூட வந்து என்னைப் பார்த்தார்கள். போலீஸார் ஒன்றும் விரட்டி அடிக்கவில்லை. ஒரு போலீஸ் ஆபிஸர் 'இத்தனை பேர்கள், 21 பேர்கள் இருந்தும் எப்படி விட்டுவிட்டீர்கள்' என்று கேட்டாராம். அதனால் பரிசீலனை ஒன்றும் தடைபடவில்லை. பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு டி.எஸ்.பி. அவர்கள்கூட 'சில பேர்கள் அகப்பட்டுக்கொண்டார்கள்' என்று சொன்னார்கள்.*

Preservation of mango fruits

* 389 *Q.*—SRI M. A. B. ARUMUGHASAMY (on behalf of SRI N. R. THIAGARAJAN) : *கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா—*

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மதுரை ஜில்லா, பெரிய குளத்தில் மாம்பழங்களை சீஸன் காலம் முடிந்த பின்னும், உபயோகத்தில் வைத்திருக்க குளிர் பதன அறை (கோல்ட் ஸ்டோரேஜ்) கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

THE HON SRI M. BHAKTAVATSALAM : There are no proposals under contemplation at present to set up any cold storage unit for fruit preservation in this State.

Election for the Legislative Council from Graduates' Constituency

* 390 *Q.*—SRI A. VEDARATHNAM : *கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—*

(அ) பல்கலைக் கழகத்தினிடமிருந்தாவது மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற கல்வி நிலையங்களிடமிருந்தாவது மொழிகளிலும் அல்லது சங்கீதத்திலும் பட்டம் பெற்றவர்களுக்கு, மேல் சபைப் பட்டதாரிகள் தொகுதிக்கு வோட்டுரிமை உண்டா?

(ஆ) இல்லையானால், அதற்கான காரணம் என்ன?

[23rd August 1960

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The answer is in the affirmative.

(*b*) Does not arise.

SRI A. VEDARATHNAM : பல்கலைக் கழக பட்டதாரிகளாக இருப்பவர்கள் எல்லோருக்கும் வாக்குரிமை வழங்கவேண்டியது அவசியம்தானே? இந்த பட்டதாரிகளுக்கு மாத்திரம் வாக்குரிமை வழங்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : வோட்டுரிமை இருக்கிறது என்று சொன்னேன்.

SRI A. VEDARATHNAM : இப்பொழுது இருக்கிற 'ஹையர் இன்ஸ்டிட்யூட்'களில் படிக்கிற அந்தப் பட்டதாரிகளுக்கும் வாக்குரிமை வழங்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்வகலாசாலையிலே பட்டம் வாங்குகிறவர்களுக்கு வோட்டுரிமை உண்டு. அதுவும் சர்வகலாசாலையால் அங்கீகரிக்கப்பட்டு சர்வகலாசாலைப் பட்டம் கொடுத்தால், அவர்களுக்கும் வோட்டுரிமை உண்டு.

SRI R. SRINIVASA IYER : Sir, may I know whether the rule that every graduate who wants to exercise his franchise should get himself registered by paying Rs. 10 has been abrogated or does it continue to be in force? Also, will the Government remove that rule because every graduate is entitled to exercise his franchise?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am not quite sure whether that rule applies for enrolment in the Council electoral rolls. But if a separate question is put, I shall certainly consider the matter.

Suriamanal Forest area

* 391 *Q.*—SRI A. VEDARATHNAM (on behalf of SRI K. R. VISWANATHAN) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the encroachers of Suriamanal Forest area in Udayarpalayam taluk, Tiruchirappalli district, either as cultivators or as houseowners, have applied to the District Collector for assignment of the land occupied by them; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under the consideration of the Government in consultation with the Collector of Tiruchirappalli and the Chief Conservator of Forests.